முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

13.12.2018, வியாழக்கிழமை

**1.** **கலியுக காப்பே அரங்கா**
**கலிகால மக்களை வழிநடத்தி**
**அழியாமை அருள வந்த தேசிகா**
**அகிலமதில் உன் பெருமை கூறி**

2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேள் திங்கள்**
**இருபானேழ் திகதி குரு வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 27ம் நாள் 13.12.2018, வியாழக்கிழமை)**
**இயம்பிடுவேன் சுந்தரமூர்த்தி நாயனார் யானும்**

3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான ஞான யுகம் ஆக்க
ஞானக்குடிலமைத்த அரங்கன்
ஞானக் கொள்கையை உலகம் ஏற்க

4. ஏற்கவே உலகமெங்கும் அமைதி
எல்லா தேசமும் மக்களுமே
ஒற்றுமைபட வாழ உண்டான
ஓங்கார சக்தி நிலை பரவும்

5. பரவவே மக்களுக்குள் இருக்கும்
பகைமை பேதமையான நிலைகள்
வருமுலகில் அகன்று பூரணமாக
வள்ளல் தன்மையான தயவு பெருகி

6. பெருகியே மக்களுக்குள் தெய்வீகம்
பெருஞ்சக்தியாக நிரம்பி நன்கு
முருகப்பெருமான் தயவும் ஆசியும்
முழுமை ஞானமும் அடைந்து சிறக்கும்

7. சிறப்பறிவு ஊட்டும் ஞானமதை
சேவையாக தருமமாக விதைத்த
அரங்கன் ஞானக் கொள்கையே
அகிலம் ஆளும் அறமாகும்

8. ஆகுமே உலகம் எங்கிலும்
அறம் பெருகவே சிறக்கவே
வகைபட சமூக மாற்றமும்
வல்லமையான ஆளுமையும் பெருகும்

9. பெருகுமே தொழில் வளர்ச்சிகள்
பிரச்சனை இல்லா சமத்துவ நிலைகள்
உருவாகும் சமதர்ம சமத்துவ
உண்மை ஞான வழிகளாக பரவி

10. பரவியே கலியுகம் மாறும்
பாதுகாப்பும் ஞானமும் கூடும்
துறவிகள் உண்மை ஞானிகள்
தொடர்பில் மக்களுக்கு தெளிவும்

11. தெளிவும் திடமும் தருமபலமும்
தெரிவிப்பேன் உலகமெங்கும் நிறைந்து
அழியாமை மிக்க ஞானயுகமாக
அரங்கன் வழியில் மாற்றம் காணும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

துன்பம்மிக்க கலியுகத்தினில் இருந்து மக்களை காக்கவே அவதரித்த கலியுக காப்பாளரே அரங்கமகா தேசிகனே கலியுக மக்களை அறியாமையில் இருந்து மீட்டு அவர்களுக்கு ஞானஒளி அளித்து வழிநடத்தி அவர்களும் அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை அடைந்து கடைத்தேறிடவே அருள் செய்ய வந்திட்ட ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 27ம் நாள் 13.12.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே சுந்தரமூர்த்தி நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுந்தரமூர்த்தி நாயனார்.

இவ்வுலகினை உயர்வான ஞானஉலகமாக ஆக்கிடவே ஆற்றல்மிக்க ஏழாம் படை வீடாய் ஞானக்குடிலாய் ஓங்காரக்குடிலினை அமைத்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆற்றல்மிக்க ஞானக்கொள்கைகளை மக்கள் ஏற்று கடைப்பிடித்திட உலகமெங்கும் அமைதியும் ஒற்றுமையும் உண்டாவதோடு எல்லா தேசத்து மக்களும் ஒற்றுமையுடன் வாழ்வதற்கு உண்டான ஓங்காரசக்தி நிலையாம் முருகப்பெருமானின் சக்தி உலகமெங்கும் பரவிடுமப்பா.

உலகமெங்கும் முருகப்பெருமான் ஞான சக்தி பரவபரவ உலகினில் மக்களிடையே உள்ள பகைமை மறையும், பேதமையான நிலைகள் எல்லாம் வருங்காலங்களில் அகன்று முழுமையான வள்ளல் தன்மை மக்களிடையே பரவி மக்களிடம் தயவு உணர்வு பெருகி மக்கள் தயவுடன் நடந்து வருவார்கள்.

மக்களிடத்து தயவு பெருக பெருக மக்களுக்குள் தெய்வீக சக்திகள் பெரும் சக்தியாக நிரம்பி முருகப்பெருமானின் தயவையும் ஆசிகளையும் அவர்களெல்லாம் அடைந்து முழுமையான ஞானமும் பெற்று சிறப்படைவார்கள்.

மக்களுக்கு சிறப்பறிவினை ஊட்டி ஞானமதை சேவையாக தருமமாக விதைத்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானக் கொள்கையே இவ்வுலகை வருங்காலங்களில் ஆள்கின்ற அற்புத கொள்கையாகும். ஆதலினால் உலகம் முழுதும் அறம் பெருகி சிறப்படைந்திட வகையுடன் சமூக மாற்றமும் உண்டாகி உலகம் வல்லமைமிக்க ஆட்சியாளர்களால் ஆட்சி செய்யப்படும்.

ஞானிகள் ஆசி பெற்ற வல்லமையான ஞான ஆட்சியிலே உலகின் எல்லா தொழிலும் வளர்ச்சி அடைந்திடும். பிரச்சனைகள் ஏதும் இல்லாத சமத்துவமான நிலைகள் எல்லாம் உருவாகும். சமத்துவ கொள்கை சமதர்ம சமத்துவ நிலைகளாக மாறி உலகினில் சமதர்ம சமத்துவ உண்மை ஞானவழிகளாக உலகமெங்கும் பரவி இந்த கலியுகமே ஞானயுகமாக மாற்றம் அடைந்திடும்.

கலியுகம் மாறி மக்களுக்கு அருள்பாதுகாப்பும் பெருகி ஞானமும் கைகூடும். துறவிகள் உண்மை ஞானிகளின் தொடர்பில் மக்களுக்கு தெளிவும் மனோதிடமும் தர்மபலமும் உலகமெங்கும் நிறைந்து அழிவிலாமைமிக்க ஞானயுகமாக ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக மாற்றம் அடையும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுந்தரமூர்த்தி நாயனார்.

–சுபம்–